மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. வ. சின்னசாமி : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் ஆடி 18-க்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் புகழ்பெற்ற இந்த இடத்திற்கு வந்து 300 அடி உயரத்திலிருந்து விழுகின்ற நீர்வீழ்ச்சியையும் கண்டு களித்து செல்கின்றனர். இந்த நீர்வீழ்ச்சி சீரமைக்கப்படுமா ? மேலும் அறநிலையத்துறையின் சார்பில் அங்கு வருகின்றவர்களுக்கு தங்கும் வசதிக்காக தங்கும் விடுதிகள் போன்றவை, மின்சார வசதிகள் இவைகளை எல்லாம் செய்து கொடுக்க அரசு ஆலோசனை செய்யுமா ? இந்த இடத்தை அபிவிருத்தி செய்து ஒரு சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கொல்லிமலையிலுள்ள இந்த புகழ்பெற்ற அரப்பளீசுவரர் ஆலயமும், அதை சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளும், அங்கு விழுகின்ற நீர்வீழ்ச்சியும் கவரக்கூடியதாக இருப்பதை மனதிற்கொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு செல்கிறார்கள் என்பதையும் அரசு அறிந்திருக்கிறது. அவர்களுக்கு அடிப்படை வசதிகளை இந்த இடத்தில் செய்து கொடுப்பதற்கு 15 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக மேற்கொள்ள இயலாது என்றாலும், வருகின்ற காலத்தில் இவற்றை கவனத்தில் வைத்து, இந்த வசதிகளை எல்லாம் இனிமேல் செய்வதற்கு அரசு ஆலோசித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. மற்ற கேள்விகள் நாளை தொடரும்.

[முற்பகல் 10–00]

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1978) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.